Weekly School Department of Education, Sabaragamuwa Province / Weekly School Department of Education, Sabaragamuwa Province

# சப்பிரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் வாராந்தப் பாடசாலை

**8 தரம்**

பாடம் : செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள்

வாரம் : 08 (21.06.2021 – 25.06.2021)

Prepared by - Embilipitiya Zone

அன்பார்ந்த மாணவர்களுக்கு!

அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் தொடர்பான கீழ்வரும் பாடக்குறிப்புக்களையும் பாடநூலையும் வாசித்து வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்க விடை தருக.

## அறுவடைக்குப் பின்னரான இழப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்.

1. பயிர்செய்யும் காலத்தில் உரியமுறையில் பராமரிக்கமை.
2. உரிய முதிர்ச்சிப் பருவத்திற்கு முன்பு விளைச்சலை அறுவடை செய்தல்.
3. நாளின் பொருத்தமற்ற நேரத்தில் விளைச்சலை அறுவடை செய்தல்.
4. காய்கறிகளை அறுவடை செய்வதற்குப் பொருத்தமான முறையை பயன்படுத்தாமை.
5. விளைச்சலை உரிய வகையில் சுத்தம் செய்யாமை மற்றும் அழுத்தித் துடைத்துச் சுத்தம் செய்தலும்.
6. அறுவடை செய்த விளைச்சலைத் தரப்படுத்தாமை.
7. உரியமுறையில் களஞ்சியப்படுத்தாமை.
8. உரியமுறையில் கொண்டு செல்லாமை.



## சில காய்கறி வகைகளை அறுவடை செய்யப் பொருத்தமான பருவங்கள்

| தக்காளி | வெண்டிக்காய் | வாழைக்காய் | பப்பாளி |
|---|---|---|---|
|  காயின் நிறம் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிறத்திற்கு மாறும்போது |  காய் பிஞ்சுப் பருவத்தில் உள்ளபோது |  காய்களின் விளிம்பு நீங்கி வட்டவடிவமாகி, கடும் பச்சை நிறத்திலிருந்து இளம்பச்சை நிறமாக மாறும்போது |  காய் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிறமாக மாறும்போது |

## சில பயிர்வகைகளும் அவற்றை அறுவடை செய்யப் பொருத்தமான நேரங்களும்

| மரக்கறி வகைகள் | இலைக்கறிகள் | வாழை | மாம்பழம் அல்லது சித்திரசு குடும்ப பழங்கள் |
|---|---|---|---|
|  காலை வேளையில் பனி அகன்ற பின |  காலை வேளை |  மு.ப. 10.00 மணிக்கு முன்னர்/பி.ப. 3.00 பின்னர் |  காலை வேளையில் பனி அகன்ற பின் |

## வினாக்கள்

**வினா 01 :** மரக்கறிகள், பழவகைகள் எவ்வாறு சேதமடைகின்றன?

**வினா 02 :** அறுவடையின் பின்னரான இழப்புக்களின் இரு வகைகளும் எவை?

**வினா 03 :** தர ரீதியிலான இழப்புக்கள் என்பதை விளக்குக.

**வினா 03 :** அளவு ரீதியிலான இழப்பு என்பதை விளக்குக.

தயாரிப்பு : திருமதி.K. ரஞ்சிதமலர் - இ/எம்பி/பரியோவான் தமிழ் கல்லூரி